தஞ்சாவூர் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை - திரு.பி.அறிவானந்தம்.,

ந.க.எண். 168/2021/ஆ5, நாள். .01.2022

பொருள் :: மனை வரன்முறைப்படுத்துதல் - தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் விளார் ஊராட்சி - புல எண்.119/7Apt,120/1pt-ல் 3008.33 சதுரமீட்டர் பரப்பளவில் மனை எண்கள். 1,2.3,4,5,6,7,8,10,11,12,13,14,15,16,17 - ஆகிய 16 மனைகளை உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம் தஞ்சாவூர் மூலம் வரன்முறைபடுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனையினை வரன்முறைப்படுத்தி ஆணையிடல் - தொடர்பாக.

16

படிக்கப்பட்டவை :: 1) அரசாணை நிலை எண்.78, நாள்-04.05.2017, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை.
2) அரசாணை நிலை எண்.172, நாள்-13.10.2017, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை.
3) வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, அரசாணை எண்.21, நாள் - 5.02.2019
4) தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர் அவர்களின் கடித ந.க.எண்.2688/2020/தமா3 , நாள் - 22.11.2021.
5) திரு.G.சிவாஜி, எண்.55, கண்ணம்மாள் தெரு, சாலி கிராமம், சென்னை -93 கடித நாள் - 11.01.2021.
6) உதவி பொறியாளர் (ஊ.வ) ஊராட்சி ஒன்றியம், தஞ்சாவூர் ஆய்வு அறிக்கை நாள்.16.02.2021
7) தொடர்புடைய ஆவணங்கள்.

*********

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூர் வட்டாரம் விளார் ஊராட்சி கிராம புல எண்.119/7Apt,120/1pt-ல் மனை எண்கள். 1,2.3,4,5,6,7,8,10,11,12,13,14,15,16,17 -ல் 3008.33 ச.மீ அளவுடைய அனுமதியற்ற மனைப்பிரிவில் அமைந்துள்ள ஜெய் ஹரீஸ் கார்டன் பார்வை 5-ல் காணும் கடிதத்தின்வழி வரன்முறை செய்திட கோரப்பட்டுள்ளது. மற்றும் அரசு தலைப்பில் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள் கீழ்கண்டவாறு செலுத்தப்பட்டுள்ளது.

1) கூராய்வு கட்டணம் ரூ.500/- வீதம் 16 மனைக்கு ரூ.8000/- செலுத்தப்பட்டுள்ளது.
Reg No. DTCP/L/0221861/2017
Transaction No. NUR26270164552
Date-02.05.2018
2) வரன்முறை கட்டணம் சதுர மீட்டருக்கு ரூ.45/- வீதம் 3008.33 சதுரமீட்டருக்க ரூ.135380/-
கணக்கு எண்
0217-Urban Development, 60- Other Urban Development Scheme ,800 Other Receipts AT Receipt under Regularisation charges of Unapproved, Layouts and plots -DTCP கணக்கு எண். (DPC: 0217-60-800-AT-2730), வ.ஊ.சி.நகர், SBI வங்கி, தஞ்சாவூர், DTCP அரசு தாலைப்பில் 07.01.2022 -ல் செலுத்தப்பட்டுள்ளது.

3) வளர்ச்சி கட்டணம் சதுரமீட்டருக்கு ரூ.25/- வீதம் கூடுதல் தொகை ரூ.75210/- மட்டும் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சி தலைவர் மற்றும் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பராமரிப்பில் உள்ள இந்தியன் ஓவர்சிஸ் வங்கி, புதிய மாவட்ட ஆட்சியரம், தஞ்சாவூர். கணக்கு எண்-378401000000322 IFSC Code – IOBA0003784 தலைப்பில் 07.01.2022 அன்று இந்தியன் ஓவர்சிஸ் வங்கி, தஞ்சாவூர் கிளையில் செலுத்தப்பட்டுள்ளது.

4) படைவீரர் கொடிநாள் கட்டணத்தொகை ரூ.5000/- வங்கி வரைவாக HDFC BANK தஞ்சாவூர், வங்கி வரைவு எண். 001884/10.01.2022-ல் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை 4-ல் காணும் தஞ்சாவூர் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், கடிதத்தில் உள்ளபடி உள்ளூர் திட்டக்குழும நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சியால் வரன்முறைப்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளதன்படி விளார் ஊராட்சியில் ஜெய் ஹரீஸ் கார்டன் மனைபிரிவில் அடங்கியுள்ள புல எண்.119/7Apt,120/1pt-ல் அமைக்கப்பட்டுள்ள அங்கீகரிக்கப்படாத மனை எண். மனை எண்கள். 1,2.3,4,5,6,7,8,10,11,12,13,14,15,16,17 - ஆகிய 16 மனைகளை மட்டும் வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலணைக்கு சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என பின்னர் தெரியவந்தால் அல்லது மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட வரன்முறை ஆணையால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிவிற்கு வழங்கப்பட்ட வரன்முறை ஆணை எவ்வித முன்னறிவிப்புமின்றி ரத்து செய்யப்படும். மேலும், தஞ்சாவூர் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், அவர்களின் செயலாணையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் இதற்கு பொருந்தும்.

12/1/22

வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
தஞ்சாவூர்.
12/01/22

பெறுநர்

திரு.G.சிவாஜி, எண்.55,
கண்ணம்மாள் தெரு,
சாலி கிராமம், சென்னை -93

நகல்- தலைவர் விளார் ஊராட்சி.

நகல்- தஞ்சாவூர் உறுப்பினர் செயலர், உள்ளூர் திட்டக்குழுமம், அவர்கள்,

நகல்-ஆ5 மனைபிரிவு வரைபட அனுமதி ஆணைகளுக்கான இருப்பு கோப்பு.

நகர் ஊரமைப்பு உதவி இயக்குனர்/உறுப்பினர் செயலர் (பொ)
தஞ்சாவூர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்/
தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம்
அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.S.தனராசு,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்: **2688/2020**தமா3 நாள்: 22.11.2021

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் - தஞ்சாவூர் மாவட்டநகர் ஊரமைப்பு அலுவலகம் - தஞ்சாவூர் மாவட்டம் , பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமபகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், விளார் ஊராட்சி மற்றும் கிராமம், புல எண்கள். 119/7Apt, 120/1pt-ல் அமையும் 43594.20 ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. அரசாணை எண்: 78, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
2. அரசாணை எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
3. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் வழிக்காட்டி நெறிமுறை ந.க.எண்: 13193/2017/LA2நாள்: 30.10.2017, 31.10.2017, 07.11.2017, 17.11.2017 மற்றும் 20.12.2017
4. அரசாணை எண்: 21, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறைந.வ.4(3) நாள்: 05.02.2019
5. அரசாணை எண்: 100,வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ந.வ.4(3) நாள்: 01.07.2019
6. மனுதாரர்கள் G. சிவாஜி மற்றும் 5 நபர்கள் ஆகியோர்களின் விண்ணப்பம் நாள். 06.11.2020
7. இவ்வலுவலக கடிதம் கடிதம் இதே எண். நாள்.10.12.2020
8. வட்டார வளர்ச்சி அலுவலர், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் ந.க.எண்.168/2021/ஆ5 நாள்.11.08.2021

---

உத்தரவு:-

பார்வை (1) மற்றும் (2)ல் கண்ட அரசாணையின் படியும் பார்வை (3)ல் கண்டவழிகாட்டி நெறிமுறைகளின் படியும் பார்வை (6)ல் கண்ட கடிதத்துடன் பெறப்பட்ட உத்தேசம் பரிசீலணை செய்யப்பட்டு அதன் தொடர்நடவடிக்கையாக பார்வை (5)ல் கண்ட அரசாணையின்படி சாலை மற்றும் பூங்கா ஒதுக்கீடு வரைபடம் தயார் செய்யப்பட்டு பார்வை (7)ல் கண்ட இவ்வலுவலக கடிதம் வாயிலாக சாலை மற்றும் பூங்கா அமைப்பு வரைபடம் அனுப்பி வைக்கப்பட்டது.

பார்வை (8)ல் கண்டுள்ள வட்டார வளர்ச்சி அலுவலர், தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் கடிதம் வாயிலாக சாலை மற்றும் பூங்கா பகுதி ஏற்பு செய்து அதன் விபரம் பெறப்பட்டுள்ளதனை தொடர்ந்து கீழ்க்காணும் உத்தரவு வழங்கப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டம் , பாபநாசம் வட்டம், தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமபகுதி, தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம், விளார் ஊராட்சி மற்றும் கிராமம், புல எண்கள். 119/7Apt, 120/1pt-ல் அமையும் 43594.20 ச.அடி பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவிற்கு **வரன்முறை மனைப்பிரிவு ம.வ./த.உ.தி.கு எண்: 19/2021** என எண்ணிடப்பட்டு, கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்படுகிறது.

..2..

மனைப்பிரிவின் மொத்தப் பரப்பு: 43594.20ச.அடி

விற்கப்பட்ட மனைகளின் எண்ணிக்கை: 1

விற்கப்பட்ட மனை எண்: 18

விற்கப்படாத மனைகளின் எண்ணிக்கை: 16

விற்கப்படாத மனைகளின் எண்கள்: 1-8, 10-17.

விற்கப்படாத மனைகளின் மொத்தபரப்பளவு: 34610.00 ச.அடி

திறவெளி ஒதுக்கீடு (OSR) இடத்தின் பரப்பு: 3526.00 ச.அடி (10.15%)

<u>செலுத்தப்பட வேண்டியகட்டணவிவரம்:</u>

1) <u>பரிசீலனைக் கட்டணம்:</u>

| | |
|---|---|
| இணையதளம் வாயிலாக மனை ஒன்றிற்கு ரூ.500/- வீதம் பரிசீலனைக் கட்டணம் செலுத்திய மனை எண்களின் விவரம் | Registration Slip No. DTCP/L/0221861/2017-ன்படி இம்மனைப்பிரிவில் உள்ள 17 மனைகளுக்கு இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. |

பரிசீலனைக் கட்டணம் செலுத்தப்படாத மனைகளுக்கு அக்கட்டணத்தை உறுப்பினர் செயலர், தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம் அவர்களின் அரசு வங்கி கணக்கில் செலுத்தப்பட வேண்டும்.

2) <u>வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம்:</u> (உதாரணமாக)

கொள்கையளவில் ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் மனைகளை வரன்முறை கோரி 04.11.2018 முதல் பெறப்படும் விண்ணப்பத்திற்கு பார்வை (4)ல் கண்டுள்ள அரசாணையில் தெரிவித்துள்ளவாறு வரன்முறைக் கட்டணம் வசூலிக்கப்பட வேண்டும்.

| மனை எண் | பரப்பளவு (ச.மீ) | வரன்முறைப்படுத்தும் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 45/- வீதம்) (ரூபாயில்) | வளர்ச்சிக் கட்டணம் (ஒரு சதுர மீட்டருக்கு ரூபாய் 25/-வீதம்) (ரூபாயில்) |
|---|---|---|---|
| **17** | **102.19** | **102.19 X 45 = ரூ. 4599 /-** | **102.19 X 25 = ரூ.2555/-** |

மேற்காண் வரன்முறைப்படுத்தும் கட்டணம் மற்றும் வளர்ச்சிக் கட்டணம் இணையதளம் வாயிலாகவும் அல்லது கீழ்க்கண்டவாறு நேரிலும் செலுத்தலாம்.

அ) வரன்முறைப்படுத்தும் கட்டணம் செலுத்துவதற்கான அரசுகணக்குத் தலைப்பு:

| | |
|---|---|
| **0217 Urban Development**<br>**60 Other Urban Development Schemes**<br>**800 Other Receipts**<br>**AT Receipts under Regularisation Charges of UnapprovedLayouts and Plots –DTCP 27 Non Taxation Fees - 30 Regularisation**<br>**(DPC: 0217 60 800 AT 2730)** | செலான் மூலம் அரசு கருவூலத்தில் செலுத்தலாம். |

ஆ) வளர்ச்சிக் கட்டணம் கீழக்காண் உள்ளாட்சியின் வங்கிக் கணக்கில் நேரில் செலுத்தலாம். வங்கியின் பெயர் மற்றும் கணக்குஎண் ஆகியவற்றினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சியிடம் விபரம் பெற்றுக்கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

மேற்காணும் கட்டணங்களை செலுத்திய பின்னரே சம்மந்தப்பட்ட மனைகளுக்கு உள்ளாட்சியால் வரன்முறை ஆணை வழங்கப்பட வேண்டும். விற்கப்படாத மனைகளைப் பொறுத்தமட்டில் அனைத்து மனைகளுக்கு அல்லது பகுதி மனைகளுக்கு மட்டும் கட்டணத்தை செலுத்தி சம்பந்தப்பட்ட மனைகளுக்கான வரன்முறை ஆணையைப் பெற்றுக் கொள்ளலாம்.

பார்வை (1) மற்றும் (2)ல் சுட்டிய அரசாணைகளின் படி மேற்காண் கட்டணம் தவிர வேறுகட்டணம் ஏதும் உள்ளாட்சி வசூலித்தல் கூடாது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நிபந்தனைகள்:**

1. அரசாணை (நிலை)எண்: 172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017-ல் விதிஎண்:7(g)(ii)-ன் படி மனைப்பிரிவு வரைபடத்தில் உள்ளவாறு சாலைகள் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீடு (OSR) இடங்கள் சம்பந்தப்பட்ட உள்ளாட்சியின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதாக கருதப்படும்.

2. நிலஉரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலணைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது மனைப்பிரிவிற்கு கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட கொள்கையளவிலான ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்.

கொள்கையளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள் மேல்நடவடிக்கைகாக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

22/11/21

உதவி இயக்குனர்/உறுப்பினர் செயலர்(பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் /
தஞ்சாவூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

22/11/2021

<u>இணைப்பு:</u>
மனைப்பிரிவு வரைபடம் இரண்டு நகல்கள்

<u>பெறுநர்:</u>

வட்டார வளர்ச்சி அலுவலர்,
தஞ்சாவூர் ஊராட்சி ஒன்றியம்,
தஞ்சாவூர் மாவட்டம்.

<u>நகல்:</u>

1. G. சிவாஜி மற்றும் 5 நபர்கள்
   எண்55, கண்ணம்மாள் தெரு,
   கண்ணபிரான் காலனி,
   சாலிகிராமம்,
   சென்னை – 600093.
2. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
   மாவட்ட ஆட்சியரகம்,
   தஞ்சாவூர் மாவட்டம்.
3. உதவி இயக்குநர்,
   நில அளவை பதிவேடுதுறை,
   மாவட்ட ஆட்சியரகம்,
   தஞ்சாவூர் மாவட்டம்.
4. வட்டாட்சியர்,
   வட்டாட்சியர் அலுவலகம்,
   தஞ்சாவூர் வட்டம்,
   தஞ்சாவூர் மாவட்டம்.

   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் வருவாய் ஆவணங்களில் உட்பிரிவு செய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)
5. சார்பதிவாளர்,
   எண்.1 இணை
   சார்பதிவாளர் அலுவலகம்,
   தஞ்சாவூர்

   } சாலை மற்றும் OSR பகுதியினை உள்ளாட்சியின் பெயரில் பதிவுசெய்யும் பொருட்டு (வரைபடம் ஒரு தொகுப்பு)
6. தொழில்நுட்ப வைப்பறை — ஒரு வரைபட தொகுப்பு